**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**
**மாவட்ட இயக்க மேலாண்மை அலகு**
**மகளிர் திட்டம் - கன்னியாகுமரி மாவட்டம்**

**படித்த மற்றும் தொழில்பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கான**

# மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

## பத்திரிகை செய்தி வெளியீடு

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2016-2017-ஆம் ஆண்டில் படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்று தரும் பொருட்டு மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் **11.03.2017 அன்று தெ.தி.இந்து கல்லூரி, நாகர்கோவிலில் வைத்து காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை** நடைபெறவுள்ளது. இம்முகாமில் உள்ளூர் மற்றும் சென்னை, திருவனந்தபுரம், பெங்களூரு போன்ற பெருநகரங்களிலிருந்து பன்னாட்டு நிறுவனங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்கள் கலந்து கொண்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க உள்ளனர்.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் **தக்கலை, குருந்தன்கோடு, திருவட்டார், கிள்ளியூர், மேல்புறம் மற்றும் முஞ்சிறை ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளை சார்ந்த** 8-ஆம் வகுப்பு முதல் தொழிற்பயிற்சி(ITI), பட்டப்படிப்பு, டிப்ளமோ இன் பார்மஸி, நர்சிங், அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை (கலை அறிவியல் மற்றும் பொறியியல்) வரை படித்த 40 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலரும் தங்களது கல்விசான்றிதழ், சாதிசான்றிதழ், குடும்பஅட்டை, இதர தகுதிசான்று (அசல் மற்றும் நகல்) மற்றும் புகைப்படங்களுடன் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**அலுவலக முகவரி:**
திட்ட இயக்குநர்,
மகளிர் திட்ட அலுவலகம்,
பூமாலை வணிக வளாகம்,
வடசேரி பேருந்து நிலையம் அருகில்,
நாகர்கோவில் - 1.
தொடர்புக்கு: 04652–272275, 04652–272449.

மின்னஞ்சல்: dpiu_kki@yahoo.com

**மாவட்ட ஆட்சித்தலைர்,**
**மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,**
**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,**
**கன்னியாகுமரி மாவட்டம்.**